# කාර්ය සාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

# 2013

## භාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

## Department of Treasury Operations

මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
කොළඹ 01

நிதி திட்டமிடல் அமைச்சு
கொழும்பு 01

Ministry of Finance & Planning
Colombo 01.

## உள்ளடக்கம்

**பக்கம் இல.**


- தொலை நோக்கு 02
- செயற்பணி 02

1. அறிமுகம் 03

2 முக்கிய தொழிற்பாடுகள் 03

3. பதவியணி தொடர்பான திட்டத் தகவல்கள் 04

4. பொது நிர்வாகம் 05

5. நிறுவனக் கட்டமைப்பு 06

6. மனித வள அபிவிருத்தி 07

7. நிதிச் செயலாற்றுகை 11

8. பௌதிகச் செயலாற்றுகை 13

8.1 காசு முகாமை 13

8.2 பொதுப் படுகடன் முகாமை 22

8.3 வெளிநாட்டு உதவி முகாமை 27

8.4 அரசாங்க வருமானம் 28

8.5 திறைசேரி தனிக் கணக்குகள் முறைமை, இலத்திரனியல் கொடுப்பனவு முறைமை என்பவற்றின் முன்னேற்றம் 34

## தொலை நோக்கு

"தென்னாசியப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த
அரசாங்க நிதி முகாமையாளராகத் திகழ்தல்"

## செயற்பணி

"திரட்டுநிதியத்திற்கும்ஏனையதிறைசேரிநிதியங்களுக்கும்சொந்தமானநிதிகளைக் கையாள்வதில்வினைத்திறனையும்சிக்கனத்தையும்பாதுகாப்பையும்உறுதிப்படுத்து வதற்காகவும்வெளிநாட்டுக்கடன்பெறுகைகள்உள்ளிட்டநிதிக்கணக்கீட்டுக்குதலை மைத்துவம்வழங்கும்அதவேளைஅரசாங்கசெலவினங்களைஅரசிறைத்திட்டங்கள்ம ற்றும்கடன்பெறுகைநிகழ்ச்சித்திட்டங்களுக்குஏற்றவகையில்வரையறுப்பதற்காகவு ம்அர்ப்பணிப்புடன்செயற்படுதல்".

## 1. அறிமுகம்

திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது திரட்டு நிதியம் (திறைசேரி காசுப் பாய்ச்சல்),பொதுப் படுகடன் என்பவற்றின் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாள்வதற்கான வினைத்திறன்மிக்க நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 2004 ஜூலை 24 ஆந் திகதி தாபிக்கப்பட்டது.இந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை தொழிற்பாட்டுரீதியான காசு உட்பாய்ச்சலாகவும் வெளிப்பாய்ச்சலாகவும் மாற்றுதல், அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடையக்கூடியவாறு தேசிய வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் வருடாந்த, மாதாந்த, நாளாந்த அடிப்படைகளில் முகாமைத்துவத் திட்டங்களை தயாரித்து வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிமிக்கதுமான முறையில் அவற்றை முகாமை செய்தல் ஆகிய பணிகளை திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மேற்கொள்கின்றது.

## 2. முக்கிய தொழிற்பாடுகள்

- திறைசேரியின் காசுப் பாய்ச்சல் முகாமை
- உள்நாட்டுமற்றும்வசதிஏற்பாடுவர்த்தகக்கடன்பெறுகைகளுக்கானவசதிஏற்பாடுகளைச்செய்தல்
- கொடுப்பனவுமுறைகளின்ஊடாகதிறைசேரிநிதிகளைப்பகிர்ந்தளித்தல்.
- செலவீட்டுமுகவரகங்களுக்கானநிதிகளைமதிப்பீடுசெய்தல், முன்னுரிமைப்படுத்தல், விடுவித்தல்.
- திறைசேரி உத்தரவாதங்களை வழங்குதல்
- அரசாங்கத்தின்கடன்வழங்கும்நிகழ்ச்சித்திட்டங்களுடன்தொடர்புடையநிதிப்பாய்ச்சல்களைத்தொழிற்படுத்துதல்.
- வரியல்லாதவருமானங்களை11 தலைப்புக்களின்கீழும்வரிவருமானங்களை01 தலைப்பின்கீழும்மதிப்பீடுசெய்து, சேகரித்துகணக்கீடுசெய்தல்.
- வெளிநாட்டுஉதவிக்கடன்கள்மற்றும்நன்கொடைகளின்கீழானநிதிகளின்விடுவிப்புக்கானஏற்பாடுகளைச்செய்தல்.
- அரசாங்கத்தின்கடன்பெறுகைகள்மற்றும்படுகடன்மீளளிப்புக்களைகணக்கீடுசெய்தல்.
- அரசாங்கத்தின்வங்கிக்கணக்குகளுக்கும்கட்டுநிதிக்கணக்குகளுக்கும்அதிகாரமளித்தலும்அவமேற்பார்வைசெய்தலும்.
- வெளிநாட்டுஉதவிச்செயற்திட்டங்களின்கணக்கீட்டுக்கானவழிகாட்டல்களைவழங்கிமேற்பார்வைசெய்துவசதிஏற்பாடுகளைச்செய்தல்.

## 3. ஊழியர்கள் பற்றிய தகவல்கள்

அட்டவணை3 (அ) 2013.12.31 ஆந்திகதியில்உள்ளவாறானஊழியர்எண்ணிக்கை

| பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள ஊழியர் தொகை |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2 | 2 |
| இ.நி.சே. - வகுப்பு III | 1 | 1 |
| இ.க.சே - வகுப்பு I | 5 | 8 |
| இ.க.சே - வகுப்பு II/III | 11 | 3 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 |
| அபிவிருத்தி உதவியாளர் | 20 | 17 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் (வகுப்பு I) | 5 | 9 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் (வகுப்பு II/III) | 50 | 40 |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாளர் | 7 | 4 |
| சாரதி | 6 | 6 |
| அலுவலக உதவியளர் (வகுப்பு I) | 1 | 3 |
| அலுவலக உதவியளர் (வகுப்பு II/III) | 11 | 9 |
| **மொத்தம்** | **121** | **104** |

## 4. பொது நிர்வாகம்

2013 ஆம் ஆண்டில் பின்வரும் ஒழுங்கமைப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- திணைக்களத்தின் முக்கியமான தொழிற்பாடுகளுக்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்யும் திணைக்களத்தின் பிரிவுகளைப் பலப்படுத்துவதற்காக மிகவும் சிக்கனமான முறையில் வளங்களைப் பயன்படுத்தக் கூடியவாறு ஏற்கனவே காணப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு மீளக் கட்டமைக்கப்பட்டது.

- வெற்றிடமாகக் காணப்பட்ட மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பதவி பதில் கடமை அடிப்படையில் நிரப்பப்பட்டது. முக்கியமான தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலுடன் இரண்டு மேலதிகப் பணிப்பாளர் நாயகங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

- 04 அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகளை அகற்றி 02 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் உருவாக்கப்பட்டன.

- நேர்முகப் போட்டிப் பரீட்சையொன்றின் ஊடாக 15 புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இத்திணைக்களத்திற்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

## 5. நிறுவனக் கட்டமைப்பு

வரைபு 5 .1



## 6. மனித வள அபிவிருத்தி

உரிய விடயப் பரப்புக்களில் ஊழியர்களின் அறிவையும் நிபுணத்துவத்தையும் மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கச்செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**உள்நாட்டுப் பயிற்சி**

| ஊழியர் வகுதி | பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்ற உத்தியோகத்தர் எண்ணிக்கை | பயிற்சித் துறை | அமைவிடம் |
|---|---|---|---|---|
| பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 3 | 12<br><br>1<br><br>1 | திறைசேரி நிதி முகாமை முறைமை<br><br>மனித வள முகாமை, நடைமுறைகள் தொடர்பான சான்றிதழ் பாடநெறி<br><br>அடிப்படைத் தமிழ் டிப்ளோமா | திணைக்களத்தின் வளவுகள்<br><br>தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்<br><br>அரசகரும மொழிகள் திணைக்களம் |
| அபிவிருத்தி உதவியாளர் | 1 | 17 | திறைசேரி நிதி முகாமை முறைமை | திணைக்கள வளவு |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 6 | 35<br><br>1<br><br>2<br><br>2<br><br>1<br><br>1 | திறைசேரி நிதி முகாமை முறைமை<br><br>ஆங்கில சான்றிதழ் பாடநெறி<br><br>தலைமைத்துவம் மற்றும் அணி உருவாக்க சான்றிதழ் பாடநெறி<br><br>புதிய .CIGAS பயிற்சி<br><br>செயலக நடைமுறைகள்<br><br>அடிப்படைத் தமிழ் டிப்ளோமா | திணைக்கள வளவு<br><br>இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்<br><br>தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம்<br><br>அரசாங்க கணக்குகள் திணைக்களம்<br><br>SDFL<br><br>அரசகரும மொழிகள் திணைக்களம் |
| அனைத்தும் | 1 | 16 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தமிழ்மொழிப் பாடநெறி | திணைக்கள வளவு |

இவை தவிர, ஊழியர்களிடம் குழு உணர்வைக் கட்டியெழுப்பி மனப்பாங்குகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2013 ஒக்டோபர் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் நுவரெலியாவில் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது. இப்பயிற்சிநெறியானது நடத்தை மாற்றத்திற்கான கோட்பாடுகள், பெறுமானங்கள் மற்றும் புலக்காட்சிகளைக் கொண்டதாக வழிப்படுத்தப்பட்டது. இப் பயிற்சிநெறியானது சுய முன்னேற்றத்திற்கும் ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களுக்கு இடையேயான பரஸ்பர தொடர்புகளை விருத்திசெய்வதற்கும் உதவியாக அமைந்தது. இந்நிகழ்ச்சியில் 55 அங்கத்தவர்கள் செயலூக்கத்துடன் பங்கேற்றனர்.

மேலும், இவ்வருடத்தில் 13 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்கான /மாநாடுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

**2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பங்கேற்ற மாநாடுகள்**

| | பெயர் | பதவி | நாடு | காலப்பகுதி | பயிற்சிநெறி |
|---|---|---|---|---|---|
| 1 | திரு. எம்.எஸ்.டி. ரணசிரி | பணிப்பாளர் நாயகம் | சிங்கப்பூர் | 09.09/2013 முதல் 13.09/2013 | நிதி, திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான இ-ஆளுகை மாற்ற முகாமைப் பயிற்சி |
| 2 | திரு. எச்.எம் அஜித் சந்திர | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | நேபாளம் | 23.04/2013 முதல் 24.04/2013 வரை | சார்க் நாடுகளின் நிதிப் பிரச்சினைகள் தொடர்பான அரசாங்க நிபுணர் குழுக்களுக்கு இடையிலான ஆறாவது கூட்டம் |
| | | | சுவிட்சர்லாந்து | 06.11/2013 முதல் 08.11/2013 வரை | கணக்கீடு மற்றும் அறிக்கைப்படுத்தலுக்கான சர்வதேச தரநியமங்கள் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான நிபுணர் குழுவின் 30 ஆவது வருடாந்த அமர்வு |
| 3 | திரு.ஆர்.எம்.ஏ .ரத்நாயக | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | சிங்கப்பூர் | 25.02/2013 முதல் 01.03/2013 வரை | நிதி, திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான இ-ஆளுகை மாற்ற முகாமைப் பயிற்சி |
| | | | இந்தோனேசியா | 19.03/2013 முதல் 21.03/2013 வரை | 3வது ஆசிய பிராந்திய பொதுப் படுகடன் முகாமை மன்றம் |
| | | | இந்தியா | 08.04/2013 முதல் 12.04/2013 வரை | உபதேசிய அரசிறை மற்றும் படுகடன் முகாமை மதிப்பீட்டுப் பயிற்சி |
| 4 | திரு.எச்.சீ.டி.எல் சில்வா | பணிப்பாளர் | சிங்கப்பூர் | 29.07/2013 முதல் 04.08/2013 வரை | நிதி, திட்டமிடல் மற்றும் பொது நிதி அமைச்சின் ஊழியர்களுக்கான நிறைவேற்றுப் பயிற்சி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | திரு.ஜீ.எஸ். குமார | பணிப்பாளர் | ஜப்பான் | 16.06/2013 முதல் 29.06/2013 வரை | உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக் கடன் கருத்தரங்கு |
| | | | சிங்கப்பூர் | 29.07/2013 முதல் 04.08/2013 வரை | நிதி, திட்டமிடல் அமைச்சின் நிறைவேற்றுத்தர பதவியணியினருக்கான நிறைவேற்றுப் பயிற்சி நிகழ்ச்சி |
| 6 | திரு.ஆர்.எம். டி.கே. ஜீ. நாமல் பண்டார | பணிப்பாளர் | சிங்கப்பூர் | 18.03/2013 முதல் 22.03/2013 வரை | நிதி, திட்டமிடல் அமைச்சின் ஊழியர்களுக்கான நிறைவேற்றுப் பயிற்சி உபாயமுறை முகாமை |
| 7 | திருமதி/செல்வி டி.கே. ரத்நாயக | பணிப்பாளர் | தென்னாபிரிக்கா | 18.03/2013 முதல் 27.03/2013 வரை | ஹொரைசன் - அங்குரார்ப்பண செயலமர்வு |
| | | | இந்தியா | 06.12/2013 முதல் 07.12/2013 வரை | சார்க் பொதுப் படுகடன் முகாமையாளர் மன்றத்தின் 2வது கூட்டம் |
| | பெயர் | பதவி | நாடு | காலப்பகுதி | பயிற்சிநெறி |
| 8 | திரு.எஸ்.டபிள்யு. மடநாயக | பிரதிப் பணிப்பாளர் | சிங்கப்பூர் | 22.04/2013 முதல் 26.04/2013 வரை | நிதி, திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான இ-ஆளுகை மாற்ற முகாமைப் பயிற்சி |
| 9 | திருமதி/செல்வி இலங்கமுதலி | பிரதிப் பணிப்பாளர் | சிங்கப்பூர் | 29.07/2013 முதல் 04.08/2013 வரை | நிதி, திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட பதவியணியினருக்கான நிறைவேற்றுப் பயிற்சி |
| 10 | திருமதி/செல்வி என்.பீ.ஏ.ஆர். ஜயவர்தன | பிரதிப் பணிப்பாளர் | சிங்கப்பூர் | 25.10/2013 முதல் 29.10/2013 வரை | நிதி, திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான இ-ஆளுகை மாற்றப் பயிற்சி |
| 11 | திருமதி/செல்வி எம்.டி.என்.எஸ். ஜயரத்ன | உதவிப் பணிப்பாளர் | சிங்கப்பூர் | 25.10/2013 முதல் 29.10/2013 வரை | நிதி, திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான இ-ஆளுகை மாற்றப் பயிற்சி |
| 12 | திருமதி/செல்வி கே. எஸ். தயாரத்ன | உதவிப் பணிப்பாளர் | சீனா | 10.10/2013 முதல் 30.10/2013 வரை | உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி பரிமாற்றங்கள் தொடர்பான கருத்தரங்கு |
| 13 | திருமதி/செல்வி கே.எம்.டி.எல். டி பீரிஸ் | உதவிப் பணிப்பாளர் | சீனா | 21.08.2013 முதல் 10.09.2013 வரை | உலகளாவிய இ-வர்த்தக மற்றும் பொருளாதார தகவல் சேகரிப்பு தொடர்பான கருத்தரங்கு |

## 6.1சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

| திகதி | சுற்றறிக்கை இல. | விடயம் |
|---|---|---|
| 17.05/2013 | TOD-04-2012(i) | 2013 மே மாதத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சம்பளத் திகதியை முற்படுத்துதல் |
| 10.06/2013 | TOD-01-2013 | 2014 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடுகள் |
| 12.06/2013 | TOD-02-2013 | வருமானம் நிலுவைகள் கூற்று - 2013.06.30 |
| 01.07/2013 | TOD-04-2012(ii) | ரமழான் பண்டிகை 2013 ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதியில் வருவதனை முன்னிட்டு 2013 ஆகஸ்ட் மாதம் சம்பளத்தை முன்கூட்டிச் செலுத்துதல் |
| 26.09/2013 | TOD-03-2013 | 2014 ஆம் ஆண்டுக்கான சம்பளங்கள், சம்பள முற்பணங்கள், ஓய்வூதியங்கள் என்பவற்றைச் செலுத்துதல் |
| 18.11/2013 | TOD-04-2013 | 2013 ஆம் ஆண்டுக்கான காசு ஏடுகளை முடிவுறுத்துதல் மற்றும் கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தலும் |
| 04.12/2013 | TOD-05-2013 | 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் மேற்கொள்ளப்படவுள்ள செலவினங்களுக்கான வருடாந்த கட்டுநிதி வரையறைகளைத் தீர்மானித்தல் |
| 31.12/2013 | TOD-06-2013 | வருமானம் நிலுவைகள் கூற்று - 31 12. 2013 |

## 7. நிதிச்செயலாற்றுகை – 2013

### அட்டவணை 7.(அ) மீளெழும்செலவுகளின் நிதிச் செயலாற்றுகை - 2013

Rs. '000

| விடயம் | வகை /பொருள் /விடயம் / விபரம் | 2012 மதிப்பீடு | 2012 உண்மை | 2013 மதிப்பீடு | 2013 உண்மை | 2012 இன் செலவினங் களுடன் ஒப்பிடுகை யில் | 2012 இன் உண்மைச் செலவினங் களின் அடிப்படை |
|---|---|---|---|---|---|---|---|
| | மீளெழும் செலவினம் | 998,010 | 725,380 | 955,300 | 955,279 | 229,899 | 31.69 |
| | **வேதனாதிகள்** | **37,639** | **37,583** | **37,298** | **37,289** | **(294)** | **(0.78)** |
| 1001 | கூலிகள் | 29,400 | 29,365 | 24,251 | 24,249 | (5,116) | (17.42) |
| 1002 | மேலதிகநேர மற்றும் விடுமுறை நாள் | 600 | 597 | 501 | 500 | (97) | (16.25) |
| 1003 | ஏனைய படிகள் | 7,639 | 7,621 | 12,546 | 12,540 | 4,919 | 64.55 |
| | **பிரயாணச் செலவுகள்** | **2,013** | **2,012** | **1,403** | **1,397** | **(615)** | **(30.57)** |
| 1101 | உள்நாட்டு | 67 | 66 | 65 | 64 | (2) | (3.03) |
| 1102 | வெளிநாட்டு | 1,946 | 1,946 | 1,338 | 1,333 | (613) | (31.50) |
| | **வழங்கல்கள்** | **3,720** | **3,679** | **3,474** | **3,473** | **(206)** | **(5.60)** |
| 1201 | எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 1,860 | 1,852 | 1,635 | 1,634 | (218) | (11.77) |
| 1202 | எரிபொருள் | 1,800 | 1,767 | 1,771 | 1,771 | 4 | 0.23 |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 60 | 60 | 68 | 68 | 8 | 13.33 |
| | **பராமரிப்புச் செலவினம்** | **1,368** | **1,363** | **1,527** | **1,525** | **162** | **11.89** |
| 1301 | வாகனங்கள் | 725 | 722 | 1,233 | 1,232 | 510 | 70.64 |
| 1302 | பொறித்தொகுதி , இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 593 | 593 | 273 | 272 | (321) | (54.13) |
| 1303 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 50 | 48 | 21 | 21 | (27) | (56.25) |
| | **சேவைகள** | **2,421** | **2,328** | **2,352** | **2,350** | **22** | **0.95** |
| 1401 | போக்குவரத்து | 860 | 860 | 1,012 | 1,011 | 151 | 17.56 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,501 | 1,408 | 1,294 | 1,294 | (114) | (8.10) |
| 1405 | ஏனையவை | 60 | 60 | 46 | 45 | (15) | (25.00) |
| | **மாற்றல்கள்** | **950,849** | **678,415** | **909,246** | **909,245** | **230,830** | **34.02** |
| 1503-01 | வருமானங்களின் மீளளிப்பு லொத்தர் அபிவிருத்தி மானியங்கள் | 450,000 | 402,567 | 498,374 | 498,373 | 95,806 | 23.80 |
| 1505-01 | அரசாங்க ஊழியர்கள் காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு | 500,000 | 275,000 | 410,000 | 410,000 | 135,000 | 49.09 |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 849 | 848 | 872 | 872 | 24 | 2.83 |

## அட்டவணை 7 (அ) மூலதனச்செலவினங்களின் நிதிச்செயலாற்றுகை - 2013

Rs. '000

| விடயம் | வகை/பொருள்/விடயம்/ விபரம் | 2012 | | 2013 | | 2012 இன் செலவினங் களுடன் ஒப்பிடுகை யில் | 2012 இன் உண்மைச் செலவினங் களின் அடிப்படை |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மை | மதிப்பீடு | உண்மை | | |
| | மூலதனச் செலவினம் | 755,300 | 754,032 | 506,800 | 502,334 | (251,698) | (33.38) |
| | **மூலதனச் செலவினங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | **3,700** | **3,198** | **3,000** | **1,491** | **(1,707)** | **(53.38)** |
| 2001 | கட்டட புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 100 | 100 | 1,100 | 209 | 109 | 109.00 |
| 2002 | பொறித்தொகுதி, இயந்திரம் | | | | | | |
| 2002-1 | திறைசேரித் தனிக் கணக்கு முறைமையின் அமுலாக்கம் | 3,000 | 2,512 | 1,000 | 981 | (1,531) | (60.95) |
| 2002-2 | ஏனையவை | - | - | 100 | 98 | 98 | 100.00 |
| 2003 | வாகனங்கள் | 600 | 586 | 800 | 203 | (383) | (65.36) |
| | **மூலதனச்சொத்துக்களின்** | **600** | **571** | **3,200** | **271** | **(300)** | **(52.54)** |
| 2102 | தளபாடம் அலுவலக உபகரணம் | 600 | 571 | 3,200 | 271 | (300) | (52.54) |
| | **நிதிச் சொத்துக்களின் கொள்ளல்** | **750,000** | **750,000** | **500,000** | **500,000** | **(250,000)** | **(33.33)** |
| 2302-05 | விவசாயிகளின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு சுழற்சி | 750,000 | 750,000 | 500,000 | 500,000 | (250,000) | (33.33) |
| | **மனித வள அபிவிருத்தி** | **1,000** | **263** | **600** | **572** | **309** | **117.49** |
| 2401 | பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி | 1,000 | 263 | 600 | 572 | 309 | 117.49 |

# 8. பௌதிகச் செயலாற்றுகை

## 8.1 காசு முகாமை

### 8.1.1 திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமை

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களமானது வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட கொள்கை இலக்குகளை அடைவதற்காக அரசாங்க நிதியை வினைத்திறன்மிக்க முறையில முகாமை செய்து கடன்பெறுகைச் செலவுகளைக் குறைப்பதற்காக வினைத்திறன்மிக்க காசுத் திட்டமிடல் மற்றும் முகாமை உபாயமொன்றைப் பின்பற்றியது. இக்குறிக்கோள்களை அடையப் பெறுவதற்காக செலவீட்டு முகவரகங்களுக்கு (அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்) உரிய காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் நிதியினை விடுவிப்பது திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் அடிப்படையான பொறுப்புக்களில் ஒன்றாகும்.கிடைக்கக்கூடிய நிதிகளை விட பணத்துக்கான கேள்வி அதிகமாகக் காணப்படுகின்றது என்தே திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் அனுபமாகும். அதனால், வரவுசெலவுத் திட்டத்தை சுமுகமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதிகளை விடுவிக்கும் நோக்கில் ஒவ்வொரு செலவீட்டு முகவரகத்தினதும் காசுத் தேவைகளை மதிப்பீடு செய்து திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் பொறுப்பாகும்.

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் 2013 ஆம் ஆண்டில் கைக்கொண்ட காசுப் பாய்ச்சல் முகாமை உபாயமானது படுகடன் கடப்பாடுகள் திரட்சியடைவதன் அழுத்தத்தைக் குறைத்தது. அதன் மூலம் பொதுப் படுகடன் மீள்நிதியீட்ட அபாயத்தை குறைக்கப்பட்டு உள்நாட்டு வட்டி வீதங்கள் மீதான அழுத்தமும் குறைக்கப்பட்டது. இந்த உபாயத்தின் கீழ், திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் எதிர்பார்க்கப்படும் மொத்தக் காசு உட்பாய்ச்சல், வரையறைகள், காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் கடன்பெறுகைக் காலங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த தொழிற்பாட்டு காசு முகாமைத் திட்டமொன்றைத் தயாரித்தது. இந்த மாதாந்தத் திட்டமானது வருடாந்த காசுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக, எதிர்பார்க்கப்படும் கடன்கள், காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் திட்டமிடப்பட்ட கடன்பெறுகைகள் என்பவற்றைக் கொண்டதாகத் தயாரிக்கப்படுகின்றது.

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களமானது மாதாந்த மற்றும் வருடாந்த காசுத் திட்டங்களைத் தயாரிக்கும் போது எதிர்காலத்தில் மாதாந்த வரி மற்றும் வரியல்லா வருமானப் பெறுகைகளின் உட்பாய்ச்சல் மற்றும் செலவினங்களைத் தீர்மானிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம், மதுவரி என்பவற்றினால் சமர்ப்பிக்கப்படும் வருமான எதிர்வுகூறல் அறிக்கைககள், முன்னைய மாதாந்த போக்குகள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றது. தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சலானது 2013 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்டமையானது செலவினங்களையும் அரசாங்க வருமானங்களை முகாமைசெய்வதற்கு/ஆற்றுப்படுத்துவதற்கு திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்திற்கு உதவியாக அமைந்தது.

காசுப் பாய்ச்சல் முகாமை, 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடையப்பெறுதல், வருமான இலக்குகளை மீளாய்வு செய்தல் என்பவற்றுக்குத் தேவையான வழிகாட்டல்களைப் பெறுவதற்காக இவ்வருடத்தில் திறைசேரிச் செயலாளரின் தலைமையில் 11 காசுப் பாய்ச்சல் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. வருமானத் திணைக்களங்களின் அதாவது உள்நாட்டு இறைவரி, இலங்கைச் சுங்கம், மதுவரி ஆகிய திணைக்களங்களின் தலைவர்களும் திறைசேரியின் தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்களும் உத்தியோகத்தர்களும் இக்கூட்டங்களில் பங்கேற்றனர்.

முன்னைய வருடங்களைப் போன்று இவ்வருடத்திலும் வருமானத்திற்கும் செலவினங்களுக்கும் இடையிலான இடைவெளி கடன்பெறுகையின் மூலம் நிரப்பப்பட்டது. எவ்வாறாயினும், திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தைப் பொறுத்தவரையில், அதன் குறிக்கோள்களை அடைவதில் 2013 ஆம் ஆண்டு சவால்கள் நிறைந்த ஒரு வருடமாகக் காணப்பட்டது. திட்டமிட்டவாறு வருமான இலக்குகள் அடையப்படாத போதிலும், வட்டிக்கான செலவினம் அதிகரித்த போதிலும், திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கியின் படுகடன் திணைக்களத்தின் உதவியுடன் 2013 ஆம் ஆண்டில் எதிர்நோக்கிய சவால்களை நியாயமான முறையில் தீர்த்தது. இவ்வாறு முகங்கொடுத்த சவால்களில் பின்வருவன முக்கியமானவையாகும்.

1. இலங்கை மத்திய வங்கியினால் அடையப்பெற வேண்டிய காலாண்டுக்கான பொருளாதார இலக்குகளுக்குப் பாதகம் ஏற்படாத விதத்தில் திறைசேரியின் காசு முகாமையை உறுதிப்படுத்துதல்.
2. அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்துதல்.
3. தனியார்துறையின் கடன் தேவைகளுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாதவிதத்தில் உள்நாட்டு நிதியீட்ட மூலங்களைப் பயன்படுத்துதல்.
4. சர்வதேச மூலதனச் சந்தையிலிருந்து குறை செலவில் படுகடன்களைப் பெறுவதற்குச் சிபாரிசு செய்தல்.
5. எதிர்பார்க்கப்படும் அரசாங்க முதலீட்டு இலக்குகளை அடையப்பெறுவதற்காக மாதாந்த உள்நாட்டுப் படுகடன் முகாமைக் குழுக் (DDMC) கூட்டங்களில் கடன்பெறுகைகளைச் சிபாரிசு செய்தல்.

### 8.1.2 திறைசேரி காசு உட்பாய்ச்சல்

**அட்டவணை 8.1 (அ)** வருமானம் சேகரிப்பு **- 2013**

(ரூபா.மில்லியன்)

| | மதிப்பீடு | உண்மையான | % |
|---|---|---|---|
| வரி வருமானம் | 1,121,091 | 920,225 | 82 |
| வரியல்லா வருமானம் | 96,164 | 102,447 | 107 |
| நன்கொடை | 7,852 | 2,307 | 29 |
| **மொத்த வருமானம்** | 1,225,107 | 1,024,979 | 84 |

**வரைபு 8.1 (அ) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானம் 2013**




**அட்டவணை 8.1 (அ) வருமானம் சேகரிப்பு - 2008 முதல் 2013**

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| வரி வருமானம் | 564,676 | 596,762 | 721,818 | 795,696 | 833,520 | 920,225 |
| வரியல்லா வருமானம் | 47,566 | 68,142 | 72,122 | 86,586 | 124,359 | 102,447 |
| நன்கொடை | 7,594 | 8,054 | 5,319 | 3,267 | 3,171 | 2,307 |

வரைபு 8.1 (ஆ) அரசாங்க வருமானத்தின் போக்கு 2008-2013




அட்டவணை 8.1 (அ) மற்றும் வரைபு 8.1 (அ) என்பவற்றில் காட்டப்பட்டுள்ளது போன்று 2013 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 84 சதவீதமாகக் காணப்பட்டது. இம்முன்னேற்றமானது வரி வருமானத்தின் மூலமான 82 சதவீதத்தையும் வரியல்லா வருமானத்தின் மூலமான 107 சதவீதத்தையும் வெளிநாட்டு நன்கொடை மூலமான 29 சதவீதத்தையும் கொண்டதாகக் காணப்பட்டது.

வாகனங்கள் போன்றவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி அரசாங்கத்தின் வருமானம் சேகரிப்பின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், வருமானச் சேகரிப்புக் கண்காணிப்பைப் பலப்படுத்தியதன் முலம் 2013 ஆம் ஆண்டில் திறைசேரியினால் 920,225 மில்லியன் ரூபாவை வரி வருமானமாகச் சேகரிக்க முடிந்தது. இது 2012 ஆம் ஆண்டில் சேரிக்கப்பட்ட வரி வருமானமான ரூபா 833,520 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 10 சதவீத அதிகரிப்பாகும். வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட வரிகள், மது வரிகள் மற்றும் ஏனைய வரிகள் மூலமான வருமானங்கள் என்பன அதிகரித்தமையே வரி வருமானத்தில் ஏற்பட்ட இந்த அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாகும். இந்த வகையில், 2013 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் 90 சதவீதம் வரி வருமானமாகக் காணப்பட்டது. மீதி 10 சதவீதம் வரியல்லா வருமான மற்றும் மானியங்களின் மூலம் பெறப்பட்டது.

வெளிநாட்டு நன்கொடைகள் மூலமான காசு உட்பாய்ச்சலானது, பல்தரப்பு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கொடைகளின் அளவு குறைவடைந்ததன் காரணமாக 27 சதவீதத்தால் குறைவடைந்து 2,307 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

2013 ஆம் ஆண்டுக்காக பாராளுமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்ட மொத்தக் கடன்பெறுகை வரையறை ரூபா 1,057 பில்லியன் ஆகும். பாராளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட கடன்பெறுகை வரையறையுடன் இணங்கிச் செல்லும் வகையில் ரூபா 1,111,208 மில்லியன் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் உள்ளிட்ட உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்டது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பவற்றின் விநியோகம் முறையே 110%, 25%, 315% சதவீதங்களில் அதிகரித்தது.

### 8.1.3 திறைசேரி காசு வெளிப்பாய்ச்சல்

திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது அரசாங்கத்தின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவியாக அமையும் விதத்தில் மூலதனச் செலவினங்களை தேவையான மட்டத்தில் பேணி வருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கு முழுமையாகப் பங்களிப்புச் செய்தது. வருமானத்துக்குப் பொருத்தமான முறையில் செலவினங்களை அமைப்பது இத்திணைக்களத்தின் சவால்மிக்க பணிகளில் ஒன்றாகக் காணப்பட்டது. ஒவ்வொரு வகைக்குமான கட்டுநிதிப் பகிர்வை அட்டவணை 8.1 (இ) காட்டுகின்றது.

**அட்டவணை - 8.1 (இ) செலவீட்டு வகைகளின் கீழான கட்டுநிதியின் பரம்பல்**

ரூபா.மில்லியன்

| | 2012 | 2013 |
|---|---|---|
| தனிப்பட்ட வேதனாதிகள் | 379,780 | 425,448 |
| ஓய்வூதியம் | 107,819 | 116,591 |
| சமுர்த்தி/ உரமானியம் | 47,567 | 28,091 |
| மீளெழும் | 124,761 | 159,896 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 410,452 | 469,928 |
| படுகடன் மீளச்செலுத்தல்கள் | 6,03,403 | 7,09,956 |
| மூலதனம் | 3,01,169 | 2,67,039 |

2013 ஆம் ஆண்டில் மீளெழும் செலவினங்களுக்காக மொத்தமாக ரூபா 1,199,954 மில்லியன் விடுவிக்கப்பட்டது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 12 சதவீத அதிகரிப்பாகும். உயர் வீதத்திலான வட்டிகள் செலுத்தப்பட்டமை, சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரித்தமை என்பனவே இந்த அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தன.

2013 ஆம் ஆண்டில் மீளெழும் செலவுகளுக்காக விடுவிக்கப்பட்ட மொத்தக் கட்டு நிதியில் 39 சதவீதம் வட்டிச் செலவுகளாகக் காணப்பட்டன. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்கான கட்டுநிதி விடுவிப்பு 12 சதவீதத்தாலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான கட்டுநிதி விடுவிப்பு 8 சதவீதத்தாலும் அதிகரித்துக் காணப்பட்டது.

மூலதனச்செலவினங்களுக்காக2013 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட கட்டுநிதி ரூ 267,039 மில்லியனாகக் காணப்பட்டது. மூலதனச் செலவினங்களுக்கான கட்டு நிதி விடுவிப்புக்கள் வீதிகள், மனிதவளங்கள், போக்குவரத்து, மின் உற்பத்தி, நீர் வவழங்கல், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர்ப்பாசனம் போன்ற நாட்டின் தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் மேம்பாட்டுக்காகவும் கிராமியப் பொருளாதாரத்தைத் தரமுயர்த்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டன.

### 8.1.4 காசு வரையறைகள் மற்றும் விடுவிப்புக்களின் உள்ளடக்கம்

திறைசேரிச்செயற்பாட்டுதிணைக்களத்தின்காசுமுகாமைப்பிரிவுபின்வரும்ஐந்துதுறைகளைக்கொண்டதாகஅமைந்துள்ளது.

1. உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை (IDS)
2. மனித வள அபிவிருத்தித் துறை (HRD)
3. உண்மைப் பொருளாதாரம் மற்றும் நிதித் துறை (REF)
4. பாதுகாப்புத் துறை (DEF)
5. நிர்வாகத் துறை (GOV)

உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் துரிதப்படுத்தும் நோக்கில் மூலதனச் செலவினத்திற்கான நிதியினைத் தாமதமின்றி விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் 2013 ஆந் ஆண்டில் மேற்கொண்டது. இந்தவகையில், 2013 ஆம் ஆண்டில் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கத்திற்காக அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் நிறுவனங்களுக்கும் மேலே குறிப்பிட்ட ஐந்து துறைகளின் கீழ் 238,416 மில்லியன் ரூபாவை விடுவித்தது.

**வரைபு 8.1 (இ) வருடாந்த காசு வரையறை மற்றும் காசு விடுவிப்புக்கள் - 2013**



### அட்டவணை 8.1 (ஈ) வருடாந்த காசு வரையறை மற்றும் காசு விடுவிப்புக்கள் - 2013

ரூபா

| | உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை | மனித வள அபிவிருத்தி | உண்மைப் பொருளாதாரம் மற்றும் நிதித் துறை | பாதுகாப்புத் துறை | நிர்வாகத் துறை |
|---|---|---|---|---|---|
| வரையறை | 148,147 | 186,089 | 149,172 | 306,830 | 372,957 |
| விடுவிப்புக்கள் | 110,017 | 161,196 | 95,901 | 273,541 | 319,215 |
| விடுவிப்பு வீதம் | 74% | 87% | 64% | 89% | 86% |

அட்டவணை8.1 (ஈ) யில்காட்டப்பட்டுள்ளது போன்று திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் ஒவ்வொரு துறையும் அதன் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு பணத்தினை விடுவித்தது. இக்காலப்பகுதியில் திறைசேரியானது பாதுகாப்பு, மனிதவள அபிவிருத்தி, நிர்வாகத்துறை என்பவற்றுக்கான வரையறைகளில் 86 சதவீதத்துக்கும் மேற்பட்ட அளவு நிதிகளை விடுவித்தது.

உண்மைப் பொருளாதாரத் துறை, உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை என்பவற்றுக்கு முறையே 64 % , 74% நிதி விடுவிக்கப்பட்டது.

### அட்டவணை 8.1 (உ) மீளெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள், கட்டுநிதி வரையறைகள் என்பவற்றின் துறைவாரியான விபரங்கள்

(ரூபா. மில்லியன்)

| துறைகள் | மீளெழும் | | | மூலதனம்(அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் நீங்கலாக) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரையறை | விடுவிப்புக்கள் | % | வரையறை | விடுவிப்புக்கள் | % |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறை | 27,534 | 18,625 | 68 | 119,070 | 91,105 | 77 |
| மனித வள அபிவிருத்தி | 138,589 | 129,399 | 93 | 45,229 | 30,440 | 67 |
| உண்மைப் பொருளாதாரம் மற்றும் நிதித் துறை | 81,869 | 51,551 | 63 | 65,856 | 43,942 | 67 |
| பாதுகாப்புத் துறை | 253,967 | 240,817 | 95 | 46,789 | 29,877 | 64 |
| நிர்வாகத் துறை | 292,080 | 275,751 | 94 | 79,335 | 43,052 | 54 |
| **மொத்தம்** | **794,039** | **7,16,143** | 90 | **356,279** | **238,416** | 67 |

**வரைபு 8.1 (ஈ)**

**மீளெழும் செலவுகளுக்கான வரையறைகள் மற்றும் நிதி விடுவிப்புக்கள் - 2013**




**வரைபு 8.1 (உ)**

**மூலதன செலவுகளுக்கான வரையறைகள் மற்றும் நிதி விடுவிப்புக்கள் - 2013**




அட்டவணை 8.1 (உ) விலும் வரைபு 8.1 (ஈ) யிலும் காட்டப்பட்டுள்ளது போன்று செலவு முகவரகங்களின் மீளெழும் செலவுகள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வேறுவிதத்தில்கூறுவதாயின், வருடாந்த வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட மொத்த காசு வரையறையில் இது 90 சதவீதமாகும். மனிதவள அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளின் மீளெழும் செலவுகளுக்கான காசு விடுவிப்பு 93 சதவீதத்தைவிட அதிகமாகக் காணப்பட்டது.

மூலதனச் செலவினங்களைப் பொறுத்தவரையில், காசு வரையறையில் 67 சதவீதத்தை திறைசேரியினால் விடுவிக்க முடிந்தது. இதுகடந்த வருடத்தில் 65 சதவீதமாகக் காணப்பட்டது. மூலதனச் செலவினத்தில் அதிகூடியளவு விடுவிப்பு அதாவது அதன் 77 சதவீதம் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் துறைக்காக விடுவிக்கப்பட்டது. இந்நிதி முக்கியமாக நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டது.

### 8.1.5 காசு வரையறைகளின் துறைவாரியான உள்ளடக்கம் மற்றும் உண்மையான விடுவிப்புக்கள்

வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கின்ற போது வளங்களை ஒதுக்கீடு செய்வதில் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. பொதுத் திறைசேரியின் வரவு செலவுத் திட்ட அமுலாக்கல் பிரிவான திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் நிதிகளை விடுவிக்கின்ற போது அதே முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் வழங்க வேண்டியுள்ளது. வரைபு8.1 (ஊ) இல்காட்டப்பட்டுள்ள உள்ளடக்கங்களுக்கு இணங்க திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் வழங்கப்பட்டுள்ள முன்னுரிமைகளை உண்மைப்படுத்தும் விதத்தில் மீளெழும் செலவுகள், மூலதனச் செலவினங்கள், அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணங்கள் என்பவற்றுக்கான நிதிகளை விடுவித்தது.

**வரைபு 8.1 (ஊ) காசுவரையறைகளின்துறைவாரியானஉள்ளடக்கம் மற்றும் விடுவிப்புக்கள் - 2013**



### 8.2 பொதுப் படுகடன் முகாமை

### 8.2.1 அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம் - 2013

இலங்கைப் பாராளுமன்றமானது வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஊடாக குறித்த வருடத்திற்கான மொத்தக் கடன் பெறுகை எல்லையை வருடாந்தம் தீர்மானிக்கின்றது. இந்தவகையில், 2013 ஆம் ஆண்டுக்கான நிதி இடைவெளியை ஈடுசெய்வதற்ககா 2012 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின்கீழ்1,303 பில்லியன் ரூபா மொத்தக்கடன் பெறுகை எல்லைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வருடத்தில் மூலவள இடைவெளியை நிரப்புவதற்கு உள்நாட்டு மூலங்களில் அதிகளவில் தங்கியிருந்த்தன் காரணமாக வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களின் அளவு குறைவடைந்த்து. இந்த வகையில் ரூபா பெறுமதியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகள் உள்ளிட்ட உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்தக் கடன்களின் பெறுமதி ரூபா 1,102.7 பில்லியனாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் 66.71 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்பெறுகை 2013 ஆம் ஆண்டில் 49.11 சதவீதத்தால் அதிகரித்து 85.75 சதவீதமாகக் காணப்பட்டது. வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தொகையானது 183.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது மொத்த கடன்களில் 14.25 சதவீதமாகும். 2013 ஆம் ஆண்டில் பெறப்பட்ட உண்மையா மொத்த உள்நாட்டு கடன்களின் பெறுமதி 1,102.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2012 ஆம் ஆண்டின உண்மையான மொத்த உள்நாட்டு கடன் தொகையான ரூபா 739.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 49.11 சதவீத அதிகரிப்பாகும்.

சாத்தியமான குறைந்த விலையில் கடன்பெறும் அரசாங்கத்தின் படுகடன் முகாமை உபாயத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அதிகரித்த செலவிலான குறுங்காலப் படுகடன் பிணையங்களுக்குப் பதிலாக நீண்ட முதிர்வுக் காலத்தைக் கொண்ட திறைசேரி முறிகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் 60.4 பில்லியன் ரூபாவாக்க் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுமதி 2013 ஆம் 237.9 பில்லியன் ரூபாவாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த்து. இது 294 சதவீத அதிகரிப்பாகும். திறைசேரி உண்டியல்களின் அதிகரிப்பு 105 சதவீத்தால் அதிகரித்து 46.8 பில்லியன் ரூபாவாக்க் காணப்பட்டது.

**அட்டவணை 8.2 (அ) அரசாங்க கடன்பெறுகை வரையறைகள் மற்றும் பயன்பாடு (ரூபா மில்லியன்)**

| விடயம் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட வரையறை | பயன்பாடு | அனுமதிக்கப்பட்ட வரையறை | பயன்பாடு |
| **மொத்தக் கடன்பெறுகைகள்** | **11,39,000** | **11,05,205** | **13,03,000** | **12,86,013** |
| உள்நாட்டு | 8,32,277 | 7,39,507 | 10,69,000 | 11,02,696 |
| வெளிநாட்டு | 3,06,723 | 3,65,698 | 2,34,000 | 1,83,317 |
| | **11,39,000** | **11,05,205** | **13,03,000** | **12,86,013** |

### 8.2.2 தேறிய உள்நாட்டு நிதியீட்டம்




2013 ஆம் ஆண்டின் மொத்த வள இடைவெளி ரூபா 516 பில்லியன் ஆகக் காணப்பட்டது. இவ்இடைவெளி பிரதானமாக, தேறிய உள்நாட்டு நிதியீட்டத்தின் (NDF) ஊடாக 392.4 பில்லியன் ரூபாவை நிதியீட்டம் செய்ததன் மூலம் நிரப்பப்பட்டது. இது வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையில் காணப்பட்ட மொத்தவள இடைவெளியான ரூபா 516 பில்லியனில்76 சதவீதமாகும்.

தேறிய உள்நாட்டு நிதியீட்டமானது சந்தைப்படுத்தக்கூடிய சாதனங்களைப் பயன்படுத்தி அரசாங்கப் பிணையங்கள் சந்தையினை மேம்படுத்தும் அரசாங்கத்தின் உபாயமுறைக்கு இணக்கமான முறையில் பிரதானமாக, திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன போன்ற சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

முன்னைய வருடத்தின் மொத்த உள்நாட்டுப் படுகடனுடன் ஒப்பிடுகையில் இது 19 சதவீதம் அல்லது ரூபா 600 பில்லியன் அதிகரிப்பாகும். இதில் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா அடிப்படையிலான திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் உள்ளடக்கப் படவில்லை. அவற்றின் பெறுமதி 2013 ஆம்ஆண்டின் இறுதியில் 3,832.8 பில்லியன்ஆககப்பதிவாகியது. 2012 ஆம் ஆண்டில் 53.9 சதவீதமாகக் காணப்பட்ட மொத்தப் படுகடனில் உள்நாட்டுப்படுகடனின் விகிதம் 56.4 சதவீதமாக அதிகரித்தது. இது உள்நாட்டு மூலங்களிலிருந்து அதிகளவிலான கடன்கள் பெறப்பட்டமையைக் காட்டுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் 2012 ஆம்ஆண்டில் 42.6 சதவீதமாகக்காணப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் 44.19 சதவீதமாக அதிகரித்தது.

### 8.2.3.1நிலுவையாகவுள்ளஉள்நாட்டுப்படுகடன்

2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்தஉள்நாட்டுப் படுகடனில் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் பங்கு முறையே 64 மற்றும்18.3 சதவீதங்களாகக் காணப்பட்டன. மீதமாகவுள்ள படுகடன்களில் இலங்கை அபிவிருத்தி முறிகள் (9.6 சதவீதம்) மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள (2.8 சதவீதம்) ரூபாக் கடன்கள் (1.4 சதவீதம்) ஏனைய கடன்கள் (3.9 சதவீதம்) என்பன உள்ளடங்குகின்றன.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் திறைசேரி முறிகளின் கையிருப்பு 17.1 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 2,452 பில்லியனாகக் காணப்பட்டது. திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூபா 700.1 பில்லியனாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 11.3 சதவீத அதிகரிப்பாகும். வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் பெறுமதி 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 65.6 சதவீதத்தால் அதிகரித்து 369.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது

### 8.2.3.2 உள்நாட்டுப்படுகடன்களின்மூதிர்வுக்கட்டமைப்பு

முதிர்ச்சியடைவதற்கு ஒரு வருடம் எஞ்சியுள்ள நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடன்களின் பெறுமதி 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 2,923.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் பதிவாகிய 2,419.5 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இது 504.1 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும். மொத்த உள்நாட்டுப் படுகடனுக்கான நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடன் அளவு 76.3 சதவீதமாகக் காணப்பட்டது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில்1.46 சதவீத அதிகரிப்பாகும்.

மொத்த திறைசேரி முறிகளின் பெறுமதி 2,452 பில்லியன் ரூபாவாகக்காணப்பட்டது. இதுமொத்த நடுத்தரமற்றும் நீண்டகாலப்படுகடனில் 83.9 சதவீதமாகும். அரசாங்கத்தின் கடன் பெறுகைச் செயற்பாடானது நடுத்தர மற்றும் நீண்டகாலச் சாதனங்களை நோக்கிக் குவிக்கப்பட்டமையானது 2013 ஆம் ஆண்டில் அரசாங்கம் தனது பயன்வளை கோட்டை விரிவுபடுத்தி கடன்கள் திரட்சியடையாமல் தவிர்ப்பதற்காக முதிர்வின்போது படுகடன் மீளளிப்புக்களை மேற்கொள்வதைச் சாத்தியமாக்கியது.

மொத்த உள்நாட்டுப் படுகடனில் ஒரு வருடத்தை விடக் குறைந்த முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட குறுகிய காலப் படு கடன்களின் பெறுமதி 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 909.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் 813.2 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இது 95.88 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும். அரசாங்கத்தின் மொத்தக் குறுகிய காலப் படுகடனில் திறைசேரி உண்டியல்கள்77 சதவீதம்என்றஅளவில்தொடர்ந்து அதிகபங்கைக்கொண்டிருந்தது.

நடுத்தரக் காலப் படுகடன் முகாமை உபாயத்துக்கு இணங்கிய வகையில் நீண்ட கால பிணையங்கள் விநியோகிக்கப் பட்டமையினால் 2012 ஆம் ஆண்டில் 3.25 வருடங்களாகக் காணப்பட்ட சராசரி முதிர்வுக் காலம் இவ்வருடத்தில் 4.8 சதவீதமாக அதிகரித்தது.

**அட்டவணை 8.2.2 2013 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடைந்த வருடத்திற்கான உள்நாட்டுப் படுகடன்களின் முதிர்வுக் கட்டமைப்பு (ரூபா மில்லியன்)**

| முதிர்ச்சியடையும் வருடம் | சாதனம் | | | | | முதிர்ச்சி மொத்தப் பெறுமதியின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | திறைசேரி உண்டியல்கள் | திறைசேரி முறிகள் | ரூபாக் கடன்கள் | இ | மொத்தம் | |
| 2014 | | | | | | 32.2 |
| 2015 | | | | | | 13.8 |
| 2016 | | | | | | 8.3 |
| 2017 | | | | | | 8.9 |
| 2018 | | | | | | 11.3 |
| 2019 | | | | | 1,44,903 | 3.6 |
| 2020 | | | | | | 2.0 |
| 2021 | | | | | | 1.8 |
| 2022 | | | | | | 1.5 |
| 2023 | | | | | | 2.4 |
| 2025 | | | | | | 0.3 |
| 2026 | | | | | 1,11,636 | 2.8 |
| 2028 | | | | | | 4.6 |
| 2032 | | | | | | 2.5 |
| 2033 | | | | | | 3.0 |
| 2043 | | | | | | 0.8 |
| **மொத்தம்** | **7,74,052** | **28,55,846** | **55,518** | **3,69,215** | **40,54,631** | 100.0 |

### 8.2.3.3 உள்நாட்டுப்படுகடன்சேவைக்கொடுப்பனவுகள்

2012 ஆம்ஆண்டில்733.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2013 ஆம் ஆண்டில் ரூபா 850.7 பில்லியன் ஆகக்காணப்பட்டது. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவான ரூபா 496 பில்லியன் (58.3 சதவீதம்), வட்டிக் கொடுப்பனவு ரூபா 354.7 பில்லியன் (41.7) என்பன இதில் உள்ளடங்கும். உள்நாட்டுப் படுகடன்களுக்கான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவு 2013 ஆம் ஆண்டில் 80.7 பில்லியன் ரூபாவாகவும் முன்னைய வருடத்தில் 37 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தில் 9.7 சதவீதமாக்க் காணப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2013 ஆம் ஆண்டில் 9.8 சதவீதமாக அதிகரித்தது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மிகச் சிறியளவில் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

முன்னைய வருடத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.2 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வருடத்தில் மேலும் வீழ்ச்சியடைந்து 4.1 சதவீதமாகக் காணப்பட்டது. முன்வருடத்தில் 69.7 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த அரசாங்க வருமானத்திற்கான உள்நாட்டுப் படுகடன் சேவைகள் 2013 ஆம் ஆண்டில் 7.3 சதவீதத்தால்அதிகரித்து74.8 சதவீதமாகக்காணப்பட்டது.

**அட்டவணை 8.1(ஆ) உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் (ரூபா மில்லியன்)**

| வருடம் | மூலதனக் கொடுப்பனவுகள் | வட்டிக் கொடுப்பனவுகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 2003 | 1,85,083 | 1,13,540 | 2,98,623 |
| 2004 | 1,47,740 | 1,05,878 | 2,53,618 |
| 2005 | 2,03,347 | 1,13,164 | 3,16,511 |
| 2006 | 2,47,536 | 1,33,787 | 3,81,323 |
| 2007 | 2,52,165 | 1,61,370 | 4,13,535 |
| 2008 | 2,58,720 | 1,82,198 | 4,40,918 |
| 2009 | 4,01,296 | 2,73,977 | 6,75,273 |
| 2010 | 3,89,672 | 2,97,127 | 6,86,799 |
| 2011 | 4,39,894 | 2,88,134 | 7,28,028 |
| 2012 | 4,15,441 | 3,17,659 | 7,33,100 |
| 2013 | 4,96,042 | 3,54,706 | 8,50,748 |

## 8.3 வெளிநாட்டு உதவி முகாமை

மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவிகள் முறைமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு கட்டுநிதிகள் ஒன்றில் செயற்திட்டத்திற்கு நேரடியாக நிதிகளை விடுவிப்பதன் மூலம் அல்லது உரிய அமைச்சின் ஊடாக செயற்திட்டத்துக்கு விடுவிப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2013 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவி முறைமையின் கீழ் 1,650 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் 13,766 வெளிநாட்டு உதவி கொடைகள் காசாகக் கிடைக்கப்பெற்றன. இவை தவிர 2,092 மில்லியன் பெறுமதியான மூலப்பொருட்களும் உபகரணங்களும் கிடைக்கப்பெற்றன.

உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதிகளை பல்வேறு செயற்திட்டங்களுக்கு வழங்கும் நோக்கத்திற்காக மத்திய வங்கி கட்டுநிதிக் கணக்குகளைப் பேணி வருகின்றது. 2013 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் இத்தகைய 12 புதிய கணக்குகளை ஆரம்பித்தது. அதனால் 2013 டிசம்பர் மாத இறுதியில் தொழிற்பாட்டில் காணப்பட்ட மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை 120 ஆகக் காணப்பட்டது. இவ்வருடத்தில் உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து இக்கணக்குகளுக்கு 40.450 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது.

## 8. 4. அரசாங்க வருமானம்

### 8.4.1 வருமானம் சேகரித்தல்

திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் 11 வரியல்லா வருமானத் தலைப்புக்களுக்கும் 01 வரி வருமானத் தலைப்புக்குமான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றார்.

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட வரியல்லா வருமானமான ரூபா 157.6 பில்லியனில் 47.4 பில்லியன் ரூபாவை அல்லது 30 சதவீதத்தை பின்வரும் வரியல்லா வருமானத் தலைப்புக்களிலிருந்து உழைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் தொலைபேசிப் பாவனையாளர் தீர்வை என்ற வரி வருமானத்தின் ஊடாக 26.8 பில்லியன் ரூபாவை உழைப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் இத்திணைக்களம் வரியல்லா வருமானமாக 50.1 பில்லியன் ரூபாவையும் வரி வருமானமாக 24.4 பில்லியன் ரூபாவையும் உழைத்தது. மேற்குறித்த 12 வருமானத் தலைப்புக்களினதும் 2012 - 2013 ஆம் ஆண்டுகளுக்கான விபரங்கள் அட்டவணை 8.4(அ) இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 8.4 (அ): வரி மற்றும் வரியல்லா வருமானச் சேகரிப்பு 2012-2013**

| | வருமானச் சேகரிப்பு ரூபா. 000 | | | |
|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | |
| வருமான விபரம் | மதிப்பீடு | சேகரிப்பு | மதிப்பீடு | சேகரிப்பு |
| **வரியல்லா வருமானம்** | | | | |
| அரசா கட்டட வாடகை | 6,50,000 | 5,82,264 | 6,12,000 | 6,20,890 |
| ஏனைய வாடகைகள் | 62,000 | 50,139 | 80,000 | 62,139 |
| கடன் வழங்கல் வட்டி | 77,04,000 | 81,00,516 | 81,67,000 | 81,78,888 |
| ஏனைய வட்டி | 13,25,000 | 13,87,711 | 16,10,000 | 14,85,088 |
| திணைக்கள விற்பனைகள் | 1,30,000 | 1,43,436 | 1,25,000 | 1,08,144 |
| நானாவிதமானவை | 71,14,582 | 29,41,497 | 70,00,000 | 74,97,293 |
| தண்டங்கள் மற்றும் பறிமுதல்கள் | 30,00,000 | 51,37,117 | 60,00,000 | 22,74,461 |
| ஏனைய பெறுகைகள் | 90,42,000 | 32,38,911 | 40,00,000 | 1,14,30,262 |
| ஏனைய நடைமுறை மாற்றல்கள் | 18,00,000 | 22,22,737 | 22,00,000 | 21,72,621 |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை | 5,00,000 | 8,31,152 | 8,00,000 | 2,80,283 |
| துணைக் கடன் மீள் அறவீடு | 1,64,70,000 | 1,64,09,105 | 1,68,25,000 | 1,59,68,527 |
| **உப மொத்தம்** | **4,77,97,582** | **4,10,44,585** | **4,74,19,000** | **5,00,78,596** |
| **வரி வருமானம்** | | | | |
| தொலைபேசிப் பாவனையார் தீர்வை | 2,29,00,000 | 2,22,89,141 | 2,67,95,000 | 2,44,45,220 |
| **உப மொத்தம்** | 2,29,00,000 | 2,22,89,141 | 2,67,95,000 | 2,44,45,220 |
| மொத்த வருமானம் | **7,06,97,582** | **6,33,33,726** | **7,42,14,000** | **7,45,23,816** |

மேற்குறித்த அட்டவணைக்கு இணங்க 2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வரியல்லா வருமானத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் 106 சதவீத அடைவு பதவாகியது. மேலும், மொத்த வருமானமானது 2012 ஆம் ஆண்டின் 41 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் 22 சதவீதத்தால் அதிகரித்து 50 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.சில வருடங்களில் அதிகரித்த அளவிலும் ஏனைய வருடங்களில் சராசரி அளவுகளிலும் காணப்படும் நானாவிதமானவை மற்றும் ஏனைய பெறுகைகளின் ஊடாகப் பெறப்பட்ட வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் இதற்குப் பங்களிப்புச் செய்தது. 2013 ஆம் ஆண்டில் தொலைபேசிப் பாவனையாளர் தீர்வையின் கீழ் இலக்காகக் கொள்ளப்பட்ட ரூபா 26.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 91% செயலாற்றுகை காணப்பட்டது.2012 ஆம் ஆண்டின் 22 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இது 10 சதவீத அதிகரிப்பாகும்.

மேலும், திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் வெளிநாட்டு உதவி நன்கொடைகளுக்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார்.

**அட்டவணை 8.4 (ஆ) வெளிநாட்டு நன்கொடைகளின் சேகரிப்பு**

| வருமான விபரம் | வருமானச் சேகரிப்பு ரூபா.000 | | | |
|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | |
| | மதிப்பீடு | சேகரிப்பு | | சேகரிப்பு |
| வெளிநாட்டு நன்கொடைகள் | 20,000,000 | 16,070,772 | 20,000.000 | 15,858,996 |
| **மொத்தம்** | 20,000,000 | 16,070,772 | 20,000,000 | 15,858,996 |

வெளிநாட்டு உதவி நன்கொடை ரூபா 20 பில்லியனாக அமையும் என மதிப்பிடப்பட்ட போதிலும் இவ்வருடத்தில் மொத்தமாக 15.9 பில்லியன் ரூபாவே நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது. இது தவிர, மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு நன்கொடைகளின் கீழ் வருமானம் சேகரிப்பு முன்னேற்றம் 79 சதவீதமாகக் காணப்பட்டது.இலங்கை நடுத்தர வருமான நாடு என்ற நிலைக்கு முன்னேறியுள்ளதனால் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் நன்கொடைகள் வீழ்ச்சிப் போக்கை காட்டிவருகின்றன.

### 8.4.2 துணைக் கடன் மூலதனம் மற்றும் வட்டியை அறவிடுதல்

துணைக் கடன்கள் தொடர்பான தகவல் தொகுதியொன்றை இத்திணைக்களம் பேணி வருகின்றது. இது மாதாந்தம் இற்றைப் படுத்தப்படுகின்றது. பதினொரு வரியல்லா வருமானத் தலைப்புக்களில், துணைக் கடன்களின் மூலதனத்தையும் வட்டியையும் அறவிடும் பொறுப்பு திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த இரண்டு வரியல்லா வருமானத் தலைப்புக்களின் கீழ் வருமானங்களை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், பொறுப்பேற்றல் ஆகிய பணிகள் இத்திணைக்களனால் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 ஆந் ஆண்டில் துணைக் கடன்களாக ரூபா 20.5 பில்லியன் விடுவிக்கப்பட்டது. கடன் மூலதனமாக ரூபா 160 பில்லியன் மீள அறவிடப்பட்டது.அத்துடன் துணைக் கடன்களுக்கான வட்டியாக ரூபா 8.2 பில்லியன் அறவிடப்பட்டது.

கடன் மீள் அறவீட்டுச் செயன்முறையைப் பலப்படுத்தியன் பயனாக 2013 ஆம் ஆண்டில் கடன் மீள் அறவீட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட இலக்குகளில் 95 சதவீத்தையும் துணைக் கடன்களுக்கான வட்டிகளின் அறவீட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட இலக்குகளில் 100 சதவீதத்தையும் அடைவது சாத்தியமாகியது. வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பன உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட துணைக்கடன் 2013 இறுதியில் உள்ளவாறான நிலுவை மீதி 371 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

### 8.4.3 உத்தரவாங்கள் மற்றும் வசதிக் கடிதங்கள் தொடர்பான நானாவித பொறுப்பு

#### 8.4.3.1 திறைசேரி உண்டியல்கள்

அரசாங்க நிறுவனங்கள் தமது மூலதன மற்றும் வர்த்தகத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதி உதவிகளைக் கோருகின்ற போது திறைசேரியும் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களமும் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமை(பொறுப்புச்) சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் தேவையான உத்தரவாதங்களை வழங்குகின்றன.

2013 ஆம் ஆண்டின் இறுதி வரையில் வழங்கப்பட்டிருந்த திறைசேரி உத்தரவாதங்களின் பெறுமதி 462,059 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது முன்னைய வருடத்தின் 266,074 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 74 சதவீத அதிகரிப்பாகும்.

இதுவரை வழங்கப்பட்டுள்ள மொத்த உத்தரவாதங்களில் சுமார் 57 சதவீதமானவை மின்வலு சக்தித் துறைக்காக வழங்கப்பட்டவையாகும். திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் வரைபு 8.4 (அ), அட்டவணை 8.4 (ஆ) என்பவற்றில் காட்டப்பட்டுள்ளன.

**வரைபு 8.4 (அ) திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் - 2013**



**அட்டவணை 8.4 (ஆ) : திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் 2012 மற்றும் 2013**

| துறை | பெறுமதி ரூபா மில்லியன் | | சதவீதம் % | |
|---|---|---|---|---|
| | **2012** | **2013** | **2012** | **2013** |
| விமானப் போக்குவரத்து | 22,544 | 23,521 | 8 | 5 |
| வங்கி | 5,000 | 5,000 | 2 | 1 |
| வீதி அபிவிருத்தி | 27,442 | 98,024 | 10 | 21 |
| நிர்மாணத் துறை | 20,405 | 65,375 | 8 | 14 |
| மின்வலு,சக்தி | 189,294 | 262,138 | 71 | 57 |
| வணிகம் மற்றும் வர்த்தகம் | 1,389 | 8,025 | 1 | 2 |
| **மொத்தம்** | **2,66,074** | **4,62,089** | **100** | **100** |

### 8.4.3.2 வசதிக் கடிதங்கள்

அரசாங்க அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரில் கடன் கடிதங்களை ஆரம்பிப்பதற்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் இத்திணைக்களம் வசதிக் கடிதங்களை வழங்குகின்றது. 2013 ஆம் ஆண்டின் இறுதி வசதிக் கடிதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் வரைபு 8.4 (ஈ), அட்டவணை 8.4 (ஆ) என்பவற்றில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 8.4 (ஈ) : வசதிக் கடன்களின் துறைவாரியான உள்ளடக்கம்**

| துறை | பெறுமதி ரூபாக்களில் மில்லியன் | | சதவீதம் % | |
|---|---|---|---|---|
| | **2012** | **2013** | **2012** | **2013** |
| பாதுகாப்பு | 12,627 | 18,364 | 45.51 | 50.87 |
| விவசாயம் | 872 | 8 | 3.14 | 0.02 |
| கல்வி | 3 | 1,165 | 0.01 | 3.23 |
| உட்கட்டமைப்பு | 10,072 | 710 | 36.30 | 1.97 |
| ஏனையவை | 4,169 | 15,851 | 15.04 | 43.91 |
| **மொத்தம்** | **27,743** | **36,098** | **100** | **100** |

**வரைபு 8.4 (ஆ) வசதிக் கடிதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் 2013**



### 8.4.4 ஆதனக் கடன் உத்தரவாத நிதியம்

அரசாங்க உத்தியோகத்தர் பெறுமதிவாய்ந்த சொத்துக்களைக் கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் 2005 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளில் வீடமைப்புக் கடன் திட்டமொன்றை வங்கித் துறையின் ஊடாக அறிமுகப்படுத்தியது. கடன்களைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் மரணித்தால் அல்லது முழுமையாக அங்கவீனமுற்றால் அல்லது மருத்துவக் காரணங்களுக்காக (தகுதிபெறும் வகுதி) ஓய்வுபெற்றால் கடன்களை உடனடியாகத் தீர்ப்பதற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் கீழ் உத்தரவாத நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக, திறைசேரி முறிகளில் 916,231,000 ரூபா ஆரம்ப முதலீட்டுடன் 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆந் திகதி இந்நிதியம் உருவாக்கப்பட்டது.

2005.04.26 ஆந் திகதிய வரவுசெலவுத்திட்டச் சுற்ற்றிக்கைக்கு அமைவாக, இந்நிதியத்தை நடைமுறைப்படுத்துதல், இந்நிதிதியத்திலிருந்து முதலீடு செய்தல், முதலீடுகளிலிருந்து சம்பாத்தியங்களை அறவிடுதல், மேலே குறிப்பிட்ட அரசாங்க ஊழியர்களின் சார்பில் கடன்களைத் தீர்த்தல் ஆகிய பணிகள் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
2011-2013 காலப்பகுதியில் இந்நிதியத்தின் கீழ் தீர்க்கப்பட்ட கடன் நிலுவைகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.4 (உ) இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 8. 4 (உ): கடன் நிலுவைகளைத் தீர்த்தல்**

| வருடம் | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 46 | 63 | 78 |
| தீர்க்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா) | 3,16,05,785.00 | 4,71,44,445.00 | 5,97,03,991.55 |

இத்திட்டத்தின் கீழ் இந்நிதியத்தின் மூலம் மேலே குறிப்பிட்ட வகுதிகளின் கீழ் தகுதிபெற்ற 316 அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக 225,268,958.55 ரூபா பெறுமதியான கடன்கள் தீர்க்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான கடன் உத்தரவாத நிதியத்தின் மீதி 1,349,027,651.55 ரூபாவாகும்.

2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதித் தொழிற்பாடுகளின் சுருக்கம் அட்டவணை 8.1 (ஊ) இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 8.4(ஊ): ஆதனக் கடன் உத்தரவாத நிதியத்தின் தொழிற்பாடு - 2013**

| | | ரூபா |
|---|---|---|
| *2013.01.01 இல் உள்ளவாறான* | | |
| *மீதி திறைசேரி முறிகள்* | 91,62,31,000 | **1,32,63,28,081** |
| *பொது வைப்புக்கள்* | 41,00,97,081 | |
| ***கூட்டுக: வருமானம்*** | | |
| *வட்டி வருமானம்* | | 8,22,50,050 |
| *ஏனைய பெறுகைகள்* | | 1,53,512 |
| | | **8,24,03,562** |
| | | **1,40,87,31,643** |
| ***கழிக்க கொடுப்பனவுகள்*** | | |
| *கடன் நிலுவைகளைத் தீர்த்தல்* | | 5,97,03,992 |
| *2013.02.31 இல் உள்ளவாறான* | | |
| *மீதி திறைசேரி முறிகள்* | 91,62,31,000 | |
| *பொது வைப்புக்கள்* | 43,27,96,652 | **1,34,90,27,652** |

கடன் நிலுவைகளின் தீர்ப்பனவானது இது வரையில் ஆரம்ப முதலீடான 916 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தாது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் மேலே உள்ள அட்டவணைகாட்டுகின்றது.

## 8.5. திறைசேரி தனிக் கணக்கு முறைமை (TSA) மற்றும் திறைசேரி நிதி முகாமை முறைமை (TFMS) என்பவற்றின் முன்னேற்றம்

திறைசேரி தனிக் கணக்கு முறைமை என்பது அரசாங்க காசு வளங்களை ஒருங்கிணைத்து உச்ச அளவில் பயன்படுத்துவதைச் சாத்தியப்படுத்தும் ஒரு சீர்தன்மை கொண்ட அரசாங்க வங்கிக் கணக்குகளைக் குறிக்கும். தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள முன்னணி நிதி முகாமை நிறுவனமாக மிளிர்வதற்கான தனது முயற்சியில் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் 2013 ஆம் ஆண்டில் தனது நிதி முகாமை முறைமையை மேம்படுத்திய அதேவேளை முக்கியமான இலக்குகளை அடையப்பெற்றுள்ளது.

திறைசேரி தனிக்கணக்கு முறைமையானது செலவீட்டு அலகுகளுக்குச் (அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்டமற்றும் பிரதேச செயலகங்கள்) சொந்தமான அனைத்து அரசாங்க வங்கிக் கணக்குகளையும் உள்ளடக்கியுள்ளது. திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் இச்செயன்முறையை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதிவாய்ந்த முறையிலும் முகாமை செய்தது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழ் 2,355 வங்கிக் கணக்குகள் இயங்கிவந்தன. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் இத்தொகை 2,263 ஆகக் காணப்பட்டது. வரைபு 8.5(அ) 2007 முதல் 2013 வரை திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழ் இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றில் இயக்கப்பட்டுவந்த கணக்குகளின் விபரம் தரப்பட்டுள்ளது. திறைசேரி தனிக் கணக்குமுறைமையின் இயக்கப்படும் வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் அதன்மூலம் அவதானிகக்கக் கூடியதாகவுள்ளது. இவ்வருடத்தில் திறைசேரி தனிக் கணக்கு முறைமையின்கீழ் 92 புதிய வங்கிக் கணக்குகள் சேர்க்கப்பட்டன. திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் முன்னேற்றம் கீழேதரப்படுகின்றது. (அட்டவணை8.5(அ))

**அட்டவணை 8.5 (அ) 2007-2013 காலப்பகுதியில் திறைசேரி தனிக் கணக்கு முறைமையில் சேர்க்கப்பட்ட புதிய வங்கிக் கணக்குகள்**

| வருடம் | கணக்குகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | இலங்கை வங்கி, | மக்கள் வங்கி |
| 2007 | 0 | 0 |
| 2008 | 73 | 36 |
| 2009 | 51 | 18 |
| 2010 | 77 | 29 |
| 2011 | 63 | 39 |
| 2012 | 73 | 17 |
| 2013 | 64 | 28 |

**வரைபு 8.5 (அ)**




**வரைபு 8.5 (ஆ)**




இந்த திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் அமுலாக்கமானது பிரதிச் செயலாளரின் கணக்களின் (திறைசேரியின் பிரதிச் செயலாளர் கணக்குகள்) தொழிற்பாடுகளை வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதிவாய்ந்த முறையிலும் மேம்படுத்த முடிந்தது. அதன்பயனாக, அரசாங்கத்தின் மேலதிகப்பற்றுக் கான வட்டிச் செலவுகள்குறைவடைந்துள்ளன.

இந்த வகையில் நாள் இறுதியில் ஒவ்வொரு அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களினதும் வங்கிக் கணக்குகளிலுள்ள காசு மீதிகள் திறைசேரியின் பிரதிச் செயலாளர் கணக்குகளின் மேலதிகப் பற்றைக் குறைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் என்பற்றிலுள்ள அரசாங்கத்தின்

கணக்குகளிலுள்ள காசு மீதி அண்ணளவாக 43 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது ரூபா 43,040,010,862 ஆகும். திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் ஊடாகத் திறைசேரியின் பிரதிச் செயலாளர் கணக்குகளுக்கு இந்த கணக்கு மீதிகளை மீளப் பெற முடியுமாக இருப்பதனால் ரூபா 4,411,601,113 வட்டிச் செலவினம் சேமிக்கப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமை இல்லாதவிடத்து மேலதிகப்பற்றுக்கான மொத்த வட்டிச் செலவு 30.1 சதவீதத்தால் அதிகரித்திருக்கும். இந்நிலைமையைப் பின்வரும் வரைபு விலக்குகின்றது.

***வரைபு 8.5 (இ)***




திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் கணக்கீட்டு முறைமையை மிகவும் பயநர் நட்புறவான முறையாக மேம்படுத்தியுள்ளது. இது திறைசேரி நிதி முகாமை முறைமை என அழைக்கப்படுகின்றது. திறைசேரி நிதி முகாமை முறைமையானது திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் அனைத்து நிதி முகாமைத் தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கொடுக்கல் வாங்கல்களின் அனைத்துப் பெறுகைகளும் கொடுப்பனவுகளும் இந்த திறைசேரி நிதி முகாமை முறைமையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இம்முறைமையானது ஒவ்வொரு நாளின் இறுதியிலும் நிதி நிலைமை தொடர்பான ஒருங்கிணைந்த தகவல்களைப் பெறுவதற்கு உதவியாக அமைகின்றது.

2013 ஆம் ஆண்டில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மொத்தமாக ரூபா 3,189.1 பில்லியன் ரூபாவைப் பெறுகையாகப் பெற்றதுடன் மொத்தக் கொடுப்பனவு ரூபா 3,208.2 பில்லியனாகப் பதிவாகியது. இந்தப் பெறுகைகள் மற்றும் கொள்வனவுகள்அனைத்தும்முறையே 9,444 உட்செலுத்துகை வவுச்சர்களின் மூலமும் 19,930 கொள்வனவு வவுச்சர்களின் மூலமும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் வினைத்திறன் மிக்கமுறையிலும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக 19,930 கொடுப்பனவுகளும்19,591 மாற்றல்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 18,331 மாற்றல்கள் இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றின் ஊடாக இலத்திரனியல் நிதி மாற்ற முறைமையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. இது மொத்த மாற்றல்களில் 92 சதவீதமாகும். இவைதவிர 2013 ஆம் ஆண்டில் பதிவாகிய 9,444 பெறுகைப் பதிவுகளில் 73.7 சதவீதம் காசோலைகளைப் பயன்படுத்தாது நிதி மாற்றல்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் நிதிச் சந்தையில் செல்வாக்குமிக்க ஒரு பங்காளராக விளங்குகின்ற திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் அதிக பெறுமதியிலான காசோலைகளின் புழக்கத்தைக் குறைக்க முடிந்த்து. அதன் மூலம் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நிதி மாற்றல்களின் வினைத்திறனும் பாதுகாப்பும் பயனுறுதியும் மேம்படுத்தப்பட்டன.

அரசாங்கத்தின் இ-நிர்வாகக் கொள்கைக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்வதற்காக திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் செலவீட்டு முகவர்களுக்கு 19,591 மாற்றல்கள் தொடர்பான விபரங்களை இலத்திரனிய ஊடகங்களின் ஊடாக வழங்கியது. இது தபாற் செலவு குறைவடைவதற்கும் தபாலில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கும் பங்களிப்புச் செய்ததுடன் கடதாசியற் பரிமாற்றத்துக்கும் அது உதவியாக அமைந்தது.